Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை-24 | 09-12-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை-295



தைப்பொங்கல் வரை 15% வீதம்
விசேட சேவைக் கழிவுடன்
உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

**R.V.பந்தல் சேவை**

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-13511) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## இயல்பான கல்விக்கு இடையூறு விளைவிக்கும்

# இராணுவ முகாம்களை அகற்றக்கோரி தீவிரமடையும் மாணவர்கள் போராட்டம்!

## வடமராட்சியில் இருந்து வலிகாமத்திற்கும் பரவியது

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் மாணவர்களின் இயல்பான கல்விக்கு இடையூறாகவுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு கோரும் போராட்டங்கள் வலுவடைந்து வருவதோடு பரவலாகியும் வருகின்றன. இந்த வகையில் வடமராட்சியில் ஆரம்பித்த போராட்டம் வலிகாமத்திலும் பரவி வருகின்றது.**

### கலட்டிச் சந்தி மினிமுகாம் அகற்றக்கோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ். கலட்டிச் சந்தியில் இருக்கும் இராணுவ மினி முகாமை அகற்ற வேண்டுமென்றுகோரி அந்த இராணுவ முகாமிற்கு முன்பாக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

மேற்படி இராணுவ முகாமிற்கான பிரதான விநியோகப் பாதைகளை வழிமறித்து நின்று போராட்டங்களை நடத்திய மாணவர்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தியும், ரயர்களைப் போட்டு எரித்தும் ஆர்ப் (IVஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ அதிகாரியின் சவப்பெட்டியுடன் வடமராட்சியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ். பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி வளாகத்தைச் சூழவுள்ள காவலரண்களையும், முட்கம்பி வேலிகளையும் அகற்றி பாடசாலைச் சூழலில் இருந்து இராணுவம் உடனடியாக வெளியேறி மாணவர்களின் சுதந்திரமான கற்றல் செயற்பாட்டுக்கு வழி விடக்கோரி வடமரா சி வலய மாணவர்கள் மூன்றாவது ம் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடு பட வடமராட்சி வலய பாடசாலை மாணவர்கள் பருத்தித் (IVஆம் பக்கம் பார்க்க)

### இயல்பான கல்விக்கு இராணுவம் வழிவிட வேண்டும்; இல்லையேல் கிளர்ந்தெழுந்து போராட்டங்கள் தொடரும்

#### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள இராணுவ முகாம்களை உடனடியாக அகற்றி இராணுவ ரோந்து நடவடிக்கைகளையும் உடனும் நிறுத்தி மாணவர்களின் இயல்பான கல்வி நடவடிக்கைக்கு வழிவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மாறாக பதற்றமான சூழலை தோற்றுவித்து மாணவர்களை அச்சுறுத்தும் நோக்குடன் தொடர்ந்தும் இராணுவம் ஈடுபட்டால் மாணவர்களாகிய நாம் எமது கற்றல் செயற்பாடுகளை நிறுத்தி இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக கிளர்ந்தெழுந்து தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் எனப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். புதிய இராணுவத் தளபதிக்கு அவசரமானதும், அவசியமானதுமாக விடுக்கப்பட்ட வேண்டுகோளிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியைச் சூழவுள்ள பிரதே (IVஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ அராஜகத்தைக் கண்டித்து இன்று விரிவுரை பகிஷ்கரிப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களும் இன்று தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்துப் போராட்டம் நடத்தவுள்ளனர்.

நேற்று யாழ். பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ இராணுவத்தினரைக் குவித்து போக்குவரத்துக்களைத் தடைசெய்து மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படுத்தியதைக் கண்டித்தும், பாடசாலை மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துமே இந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

### புலிகளிடம் சரணடைந்த புகழ்வேந்தனின் இரு சகோதரிகள் கருணா குழுவால் படுகொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையில் ஒட்டுக்குழுக்களின் துப்பாக்கிச்சூட்டில் சகோதரிகள் இருவர் படுகொலை செய்யப்பட்டதாகவும், இரண்டு வயதுக் குழந்தை காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை சுமார் இரண்டு மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், கொல்லப்பட்ட இருவருக்கும் குழந்தைகள் (IVஆம் பக்கம் பார்க்க)

### சகோதரிகள் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு விடுதலைப்புலிகள் பலத்த கண்டனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையில் சகோதரிகள் இருவர் ஒரே வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில்;


கடந்த சுமார் நான்காண்டுகாலப் போர்நிறுத்தத்தை மிகமோசமாகப் பாதித்துவரும் ஒட்டுப் படைகளின் செயற் (IVஆம் பக்கம் பார்க்க)

### நோர்வேத் தூதுவர் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பதற்ற நிலைமைகள், சமாதான முயற்சிகளில் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் ஆகியன தொடர்பாக ஆராயும் பொருட்டு இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரஸ்கர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை (IVஆம் பக்கம் பார்க்க)



#### எட்டு சதவீத பொருளாதார வளர்ச்சியாம்

### மகிந்தவின் சிந்தனை அடிப்படையில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு!

(கொழும்பு)

சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ் நேற்றுப் பிற்பகல் கூடிய பாராளுமன்ற அமர்வின்போது, 'மகிந்தவின் சிந்தனைகள்' அடங்கிய முழுமையான வரவு செலவுத் திட்டத்தினைச் சமர்ப்பித்தார்.

ஆரம்பத்தில் அவர் தனது வரவு செலவுத்திட்ட உரையின்போது முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாகவும், அதே நேரம் அந்த வரவு செலவுத்திட்டத்தில் தவறவிடப்பட்ட பல அம்சங்களை அடக் (IVஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கேம்பிறிச் கல்லூரி

விசேட O/L மாணவர்களிற்கான விஞ்ஞான கருத்தரங்கும் இறுதிப்பரீட்சைக்கு ஏற்ற வினா விடைப் புத்தகமும் வழங்கப்படும். காலம் 9மணி - 4மணிவரை 09.12.2005 வெள்ளிக் கிழமை நடைபெறும். கட்டணம் 100/= பௌதிகவியல் ஆசிரியர் சு.தவபாலன்

(7076)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

இலங்கை கணனிகள் சங்கத்தினால் நடாத்தப்படும் பரீட்சை

**Srilankan Computer Driving Liecence**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகட்கு:

வின்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போ வீதி, கிளிநொச்சி

(சி.13074)

## காணவில்லை

வவுனிக்குளம் பாலையடியிலிருந்து வவுனியா சென்ற **செல்வி சுமுதினி கிருஸ்ணகுமார்** வயது 25 வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து வெள்ளைவானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இச்சம்பவத்தின் போது அருகில் நின்ற இவரது உறவினர் இதனை கண்டு மனித உரிமைச் செயலகத்திற்கு முறையிட்டுள்ளார். எனவே இப்பெண் பற்றிய தகவல் அறிந்தவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கோ அன்றி கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கோ அறியத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

முகவரி:

**திருமதி கந்தையா சரஸ்வதி,**
**இல.100/1 மகாஇறம்பைக்குளம்,**
**வவுனியா.**

(6440) தகவல்: **க. சரஸ்வதி**

## பயிற்சிப்பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

உளச் சமூகப்பிரச்சினை தொடர்பான ஆற்றலை வலுப்படுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தலுமான பயிற்சிப் பட்டறை ஒன்று இன்றும் நாளையும் வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறையானது இன்று காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரையும் இதேபோன்று நாளைய தினமும் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம் பிரதமவிருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் நெடுங்கேணி பிரதேச செயலக கிராமசேவை உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (கு)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி.

வழ.இல:-139 /05
தன்மை:-நானாவிதம்,
பெறுமதி:-1108231/-

வழக்காளி.
கனகரத்தினம்
விஜயகுமார்.
145,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

எதிராளி.
கிறிஸ் கந்தராசா,சுதாதரன்,
154ஆம் கட்டை,
திருமுறிகண்டி.
கிளிநொச்சி.

### பகிரங்க அறிவித்தல்

கிளிநொச்சி,"தமிழ்க்கடல் வாணிப வாடிக்கையாளர்களுக்கு! இவ்வழக்கின் வழக்காளியான தமிழ்க்கடல் வாணிப உரிமையாளர். அதன் முகாமையாளராகவும் காசாளராகவும் செயற்பட்ட இவ்வழக்கின் எதிராளிக்கெதிராக,இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளமையாலும் அவரது பணிநிலையில் இருந்து இடைநிறுத்தியுள்ளமையாலும் குறித்த எதிராளியுடன் தமிழ்க்கடல் வாணிபம் சார்ந்த எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களையும் இதர வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என மன்றின் நீதியாளர் கனம். செல்வி சாதனா அவர்களினால் 08.12.2005 அன்று பிறப்பிக்கப்பட்ட நாளேட்டு கட்டளைக்கு அமைவாக இப்பகிரங்க அறிவித்தல் ஊடாக அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மேற்படி விடயத்தினை பகிரங்கப்படுத்துகின்றோம்.

"மன்றின் கட்டளைப்படி"

வரைந்தவர்:-
வழக்காளியின் சட்டத்தரணி
திரு.இரா சரவணபவானந்தன்,
பூநகரி,கிளிநொச்சி.

பதிவாளர்.
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

(6441)

## University of Jaffna-Sri Lanka
## Faculty of Graduate Studies
### Examination-2005

**Postgraduate Diploma in Education Part Time I (Batch II- 2004/06)& part Time II (Batch I- 2003/05) Jaffna & Vavuniya**
**Postgraduate Diploma in Education- Full time -2004/05**
**Master of Education (Batch V-Jaffna) & (Batch II- Vavuniya)**
**Postgraduate Diploma in Public Administration- 2004/05 Batch III**

Appllcations are invited form ellglble students to sit for the above Examination.

Examination entry forms could be obtained form the office of the Dean, Faculty of Graduate Studies, University of Jaffna/Dean Faculty or Business studies, Vavuniya Campus.Parfected applications should be retumed on or before 20.12.2005 at the Faculty of Graduate Studies, University of Jaffna/Faculty of Business studies, Vavuniya Campus.

Candidates repeating the Examination for the above courses are also requested to apply with in the above date.

Registrar
7/12/2005

(சி/13439)

இப்பொழுது வன்னி மாவட்டத்திலும்
யாழ். குடாநாட்டிலும்
ஒவ்வொரு 10 மணிநேர மோட்டின்
நுளம்புத்திரி பைக்கற்றினுள் மேலதிக
ஒரு சோடி நுளம்புத்திரி இலவசம்!




இப்பொழுது அனைத்து விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளமுடியும்
கையிருப்பு உள்ளவரை மட்டும்.10 மணி நேர பாதுகாப்பு.

RECKITT BENCKISER




ஏக விநியோகத்தர்கள்
கிளிநொச்சி தும்பிக்கையான் களஞ்சியம் T.P:-021-2285840
யாழ்ப்பாணம் றூபா பன்முக வர்த்தகம் T.P:-021-2222479

## பருத்தித்துறை ஹாட்லி மாணவர்களின் எதிர்ப்பு!







(படங்கள் : காங்கேயன்)

## யாழ். பல்கலைக்கழகச் சூழலில்!





(படங்கள் : 41)

# தமிழீழ கரையோர காவற்படையணியின் புதிய தொகுதிக்குப் பயிற்சி ஆரம்பம்

(முல்லைத்தீவு)

லெப். கேணல் திருவடி பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படையின் கரையோர காவற்படையின் மூன்றாவது பயிற்சித் தொகுதியின் ஆரம்ப விழா கடந்த செவ்வாய்க் கிழமை மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பயிற்சியாளர் விஜிக்குட்டி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா. ரங்கன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ கடற்படையின் தளபதி மங்களேஸ் ஏற்றினார். லெப். கேணல் திருவடியின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரினை கடற்படைப் பொறுப்பாளர்களில் ஒருவரான வைர முத்து ஏற்றினார். தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ கடற்படைத் தளபதி மங்களேஸ் நிகழ்த்தினார். இதில் 160 கரையோர காவற்படை வீரர்கள் பயிற்சி பெறுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

(20)

# இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சி நியமிக்கப்படடுள்ளார்.

வடபகுதிகளில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் காலி,தியத்தலாவ ஆகிய பகுதிகளில் இராணுவத்தின் பொறுப்பு அதிகாரியாக செயற்பட்டவர் நந்தா மல்லவராச்சி.சிறிலங்கா அரசாங்கத்தின் பல்வேறு உயரிய விருதுகளையும் பெற்றுள்ளார். 1951ஆம் ஆண்டு அநுராதபுரத்தில் பிறந்தவர் இவர்.1972ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தில் இரண்டாம் லெப்டினனாக இணைந்தார்.

# இந்தியத் தூதரகத்திற்கு கொமாண்டோ பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு சிறிலங்கா இராணுவ கொமாண்டோப் பிரிவினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் அமைப்பைத் தடைசெய்யுமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்தியா வேண்டுகோள் விடுத்திருப்பதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது.

இந்திய தூதரகத்தின் உள்ளகப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கென கறுப்புப் பூனைப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**அம்பாறை விநாயகபுரத்தில் கைக்குண்டு வீச்சு**

# நான்கு அதிரடிப்படையினர் உட்பட ஏழு பேர் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் விநாயக புரத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மீது நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் நான்கு அதிரடிப்படையினர் உட்பட ஏழு பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அம்பாறை மற்றும் திருக்கோயில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கஞ்சிகுடிச்சாறு முகாமிலிருந்து வழமையான கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் மீது இனந்தெரியாத நபர்களினால் வீசப்பட்ட கைக்குண்டு வெடித்துச் சிதறியதில் இவர்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களில் ஒரு பெண், ஒரு சிறுவன் உட்பட மூன்று பேர் பொதுமக்கள் என திருக்கோவில் சிறிலங்கா பொலிசார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் எவரும் கைதாகவில்லை.

# கிளி.பொன்னம்பலம் மருத்துவ மனையில் இருதய சிகிச்சை

அவுஸ்திரேலியாவில் இருந்து வருகைதந்துள்ள இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மன்மோகன் அவர்களால் எதிர்வரும் சனி,ஞாயிறு, திங்கள் கிழமைகளில் கிளிநொச்சி பொன்னம்பலம் மருத்துவமனையில் காலை 9.00மணியிலிருந்து பிற்பகல் 4.00மணிவரை சிகிச்சை நடைபெறும். பயன் பெறவிரும்புவோர் வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

## பரீட்சை

மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தின் 2005-2006ஆம் ஆண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பதற்கான திறமைகாண் பரீட்சை நாளை இடம்பெறவுள்ளது.

வடிவமைப்புப் பட்டப்பாடநெறி, கட்டடக் கலைப்பட்டப் பாடநெறி ஆகிய பாடநெறிகளுக்கு இந்தப் பரீட்சை நடைபெறவுள்ளது. உரிய அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் பல்கலைக்கழக பரீட்சைகள் திணைக்கள உதவிப் பதிவாளருடன் தொடர்பு கொள்ளும்படியும் வேண்டப்பட்டுள்ளார்கள். (41)

# க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தே.அ.அட்டை கட்டாயமில்லை

(கொழும்பு)

நடைபெறவுள்ள க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கான அனுமதி அட்டை பெறுவதற்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தேசிய அடையாள அட்டை கட்டாயப்படுத்தப்படமாட்டாதென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். சிலபாடசாலைகளில் தேசியஅடையாள அட்டை கட்டாயம் தேவையெனக்கூறி பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்க மறுத்தமையை அடுத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# உயிலங்குளம் சோதனைச்சாவடி ஊடாகப் பயணம் செய்யத் தடை

**கண்காணிப்புக் குழுவிற்கு மனு**

மன்னார் உயிலங்குளம் சோதனைச்சாவடி ஊடாக செல்வதற்கு சிறிலங்கா படையினர் நேற்று முன்தினம் தடை விதித்ததனைக் கண்டித்து மன்னார் மாவட்ட பொதுஅமைப்புக்களால் மன்னார் மாவட்ட இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழுவினரிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கடந்த காலத்தில் அமைதியாக இருந்த மன்னார் மாவட்ட மக்கள் தற்பொழுது சமாதானத்தை விரும்பி செயற்படுகின்றார்கள். ஆனால் அண்மையில் நடைபெற்ற சனாதிபதித்தேர்தலுக்குப் பின்னர் அமைதியான சூழ்நிலை மாறியுள்ளது. அத்துடன் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு படையினரின் செயற்பாட்டால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

எனவே இதனை உணர்ந்து சகல தரப்பினரும் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காமல் செயற்பட முன்வரவேண்டும். நேற்று முன்தினம் பொதுமக்கள் பலர் தமது அன்றாட வேலைகளுக்காக உயிலங்குளம் சிறிலங்கா இராணுவ சோதனைச்சாவடி ஊடாகச் சென்றபோது அவர்களைச் சிறிலங்கா இராணுவத்தினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இச்செயலானது மக்களைப்பெரிதும் பாதிக்கக்கூடிய விடயம் என்றும் இராணுவத்தினரின் இவ்வாறான செயல்களை வன்மையாகக் கண்டிப்பதாகவும் எதிர்காலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காது சிறிலங்கா இராணுவத்தினர் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ். இராணுவத்தளபதிகள் நீக்கம்
# புதியவர்களை நியமிக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளின் கீழ் சிறிலங்கா இராணுவத்தின் யாழ். படைப்பிரிவுத் தளபதி மற்றும் படையணியின் தளபதி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு படைப்பிரிவு கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மற்றும் யாழ். 53 ஆவது படையணித்தளபதி மேஜர் ஜெனரல் நிமல் ஜயசூரிய ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குப் பதிலாக மேஜர் ஜெனரல் பீ.ஏ சந்திரசிறியையும் கொமாண்டோப் படைப்பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் சிறிநாத் ராஜபக்ஷவையும் நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரிகேடியர் சிறிநாத் இதற்கு முன்னர் மன்னார் பிரதேச கட்டளைத் தளபதியாக கடமையாற்றியுள்ளார்.

முப்படைகளின் தளபதிகள் நேற்று முன்தினம் யாழ். குடாநாட்டிற்கு பயணம் செய்திருந்தபோது மேஜர் ஜெனரல் சந்திரசிறியும் அவர்களுடன் சென்றிருந்தார். வடபகுதி பாதுகாப்புத் தொடர்பில் பல சிக்கல்கள் இருப்பதாக யாழ். பயணத்தின் போது பாதுகாப்புத்தரப்பு அதிகாரிகளுக்குத் தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்தல் முப்படை மற்றும் சிறிலங்கா பொலிஸ துறையினர் இணைந்து சுற்றுக்காவல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வதித்தடைகளை ஏற்படுத்தி சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முப்படைத் தளபதிகளின் யாழ். பயணத்தில் முடிவெடுக்கப்பட்டது. சந்தேகத்திற்கு இடமானோர்கள் மறைந்திருப்பதாக சந்தேகிப்படும் இடங்களில் உத்திரவின்றி தேடுதல்களை நடத்துவதற்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டடுள்ளன.

### திருமலையில் இன்று கதவடைப்பு

வடக்கு கிழக்கில் அரச படைகளின் அடாவடித்தனங்களைக் கண்டிப்பது உட்பட நான்கு விடயங்களை முன்வைத்து இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலையில் பூரண கதவடைப்பு நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தின் பொங்கு தமிழ்ச்சமூகத்தின் பெயரினால் இது தொடர்பாக அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

# ஞானம்- கண்காணிப்புக்குழு தலைவர்
# புளியங்குளத்தில் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோனி அவர்களிற்கும் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் அவர்களிற்கும் இடையேயான சந்திப்பொன்று நேற்று புளியங்குளம் அரசியல்துறை செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு நடைபெற்ற மேற்படி சந்திப்பின் போது நேற்று முன்தினம் வவுனியா பேருந்து நிலையத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தின் போது ஒரு பொது மகன் கொல்லப்பட்டதும் ஐந்து பொது மக்கள் காயமடைந்தமையுமானது இயல்பு நிலையினை சீர்குலைகும் நோக்குடன் ஆயுதக் குழுக்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் என ஞானம் அவர்களால் எடுத்துக் கூறப்பட்டது. மேலும் தொடர்ந்தும் இப்படியான சம்பவங்களால் பொது மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதனை உறுதி செய்யும் முகமாக கண்காணிப்புக் குழு ஆயுதக் குழுக்களின் செயற்பாட்டினை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் ஞானம் கேட்டுக் கொண்டுள்ளார். (கு.தீ)

## கலட்டியில்...

பாட்டங்களை நடத்தினர்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி, கலட்டி தமிழ்கலவன் பாடசாலை, திறந்த பல்கலைக்கழகம், யாழ். பல்கலைக்கழகம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை எனப் பல கல்வி நிறுவனங்களுக்கு சமீபமாக மேற்படி முகாம் அமைந்திருப்பது மாணவர்களது இயல்பான கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருப்பதுடன் இம்மினி முகாமில் நிலைகொண்டுள்ள படையினர் மாணவர்களை சமூக சீரழிவுச் செயல்களுக்குத் தூண்டும் வகையில் செயற்படுவதாகவும் சுட்டிக்காட்டியே மாணவர்கள் இப்போராட்டத்தை நடத்தினர்.

மாணவர்கள் மேற்கொண்ட இப்போராட்டத்தால் முகாமிற்குள்ளேயே முடக்கமடைந்த இராணுவம் மாணவர்களை விரட்டியடிக்க துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஆத்திரமடைந்த மாணவர்கள் பதிலுக்கு இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர். கற்களாலும், போத்தல்களாலும், செருப்புக்களாலும் இராணுவத்தினரை நோக்கி வீசித் தாக்கினர். இதனால் இரு தரப்புக்குமிடையே பெரும் மோதல் மூண்டது. இராணுவத்தை மாணவர்களும், மாணவர்களை இராணுவமும் மாறி மாறி கலைத்துக் கலைத்துத் தாக்கினர்.

இதனிடையே நண்பகல் 12. 00 மணியளவில் சம்பவ இடத்திற்கு வந்த இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் மாணவர்களையும், இராணுவத்தையும் சமரசம் செய்ய முயற்சித்தனர்.

எனினும், மாணவர்களது கோரிக்கைகளையோ, கண்காணிப்புக் குழுவினரது ஆலோசனைகளையோ, சமரச முயற்சிகளையோ இராணுவத்தினர் ஏற்காததனால் கண்காணிப்புக் குழுவும் சம்பவ இடத்தைவிட்டு விலகிச் சென்றது. இதனையடுத்து மாணவர்களுக்கும், படையினருக்குமிடையான முறுகல் நிலை தொடர்ந்தது. இது இவ்வாறிருக்க சம்பவம் இடம்பெற்ற கலட்டிப் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவம் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்த முற்பட்ட போதும் மாணவர்கள் கைகள் ஓங்கியிருந்ததால் படையினர் விலகிச் சென்றனர்.எனினும், அங்கு பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டதால் அங்கு தொடர்ந்தும் பதற்றம் நிலவி வருகின்றது.

(37,33,41,28)

## இயல்பான..

சங்களை நேற்றுக் காலை சுற்றிவளைத்த இராணுவம் மாணவர்களுக்கு அச்சுறுத்தும் நோக்குடனும் வீதியால் பயணித்த மக்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இச்செயலானது மாணவர்களைச் சீண்டி, குழப்பத்தை ஏற்படுத்துகின்ற செயலாகவே உள்ளது. அத்துடன் பல்கலைக்கழக வீதிகளில் ரோந்து செல்வதும், தேவையற்ற விதத்தில் தரித்து நிற்பதும், மாணவர்களுக்கு ஆத்திரமூட்டும் செயல்களைச் செய்வதும் இராணுவத்தினரின் அன்றாட நடவடிக்கையாக இருக்கின்றது. இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மாணவர்களினதும், மக்களினதும் போராட்டங்களுக்கு மதிப்பளிக்காது, தொடர்ந்து இராணுவ எந்திரத்தைப் பயன்படுத்தி மக்களின் அபிலாசைகளை அடக்க முயல்வீர்களானால் குடாநாட்டில் என்றுமில்லாத அளவுக்கு எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை உருவாவதை யாராலும் தடுக்க முடியாது போகும் என்பதையும் உங்களுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம் என மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## புலிகளிடம்..

இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொல்லப்பட்டவர்களில் ஒருவர் யோகராஜா யோகேஸ்வரி (வயது-24) குகன் வதனி (வயது- 18) எனவும், யோகராஜா திசா (வயது - இரண்டு) என்ற குழந்தையே காயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கஞ்சிக்குடிச்சாறில் கருணா ஒட்டுக் குழுவைச் சேர்ந்த நால்வரைச் சுட்டுக் கொன்றுவிட்டு விடுதலைப்புலிகளிடம் சரணடைந்த புகழ்வேந்தன் என்பவரின் சகோதரிகளே சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நோர்வே...

மேற்கொண்டு நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்த பிரஸ்கர் பலாலி இராணுவத்தலைமையகத்தில் முற்பகல் பத்து மணியளவில் படை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

பின்னர் முற்பகல் 11 மணியளவில் யாழ். அரசசெயலகத்துக்கு வந்த பிரஸ்கர் யாழ். மாவட்ட அரசஅதிபர் கே.கணேஷை சந்தித்துப் பேசசுக்களை நடத்தினார்.

இச்சந்திப்புகளின்போது இராணுவம் மீது யாழ்.குடாநாட்டில் நடத்தப்படும் தாக்குதல்களால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை, சமாதான முயற்சிகளில் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் குறித்தும் இந்த சூழ்நிலையில் அரசு-புலிகளுக்கிடையேயான சமாதானப் பேச்சுகளை முன்னெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் ஆராய்ந்துள்ளார். (33)

## மகிந்தவின்...

கியதாகவும் தனது வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். அடுத்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம் எட்டு வீதத்திற்கு மேல் உயர்த்துவதே நோக்கம் எனவும் தெரிவித்தார்.

நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தின் முக்கியமான சில அம்சங்கள் பின்வருமாறு,

- ☐ சமுர்த்திக்கொடுப்பனவு 50 சதவீத அதிகரிப்பு.
- ☐ மாணவர்களுக்கு மதிய உணவு.
- ☐ அரச உத்தியோகத்தர்களின் ஆகக் குறைந்த சம்பளமாக 11630 ஆக உயர்வு
- ☐ மாதாந்த சம்பள அதிகரிப்பு ரூபா.2280
- ☐ பிறந்த குழந்தைகளில் இருந்து ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பால்மாவுக்கு மாதம் 200ரூபா கொடுப்பனவு.
- ☐ வாழ்க்கைச்செலவுக்கென 1000 ரூபா மேலதிக கொடுப்பனவு
- ☐ விடுமுறைகள் குறைவாக எடுப்பவர்களுக்கு விசேட கவனம். குழந்தை ஒன்று பிறந்தால் தகப்பனுக்கு மூன்று நாள் கட்டாய லீவு.
- ☐ பாதுகாப்பற்ற ஆபத்தான தொழில் புரிபவர்களுக்கு காப்புறுதி.
- ☐ ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விசேட கொடுப்பனவுகளும். இடைக்காலக் கொடுப்பனவுகளும்.
- ☐ அரச உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்புக்கடன்.
- ☐ சேரிகளில் வாழ்பவர்களுக்கு விசேட வீடமைப்பு.
- ☐ அரச ஊழியர்களுக்கு வாகனக் கடன்.
- ☐ 1500சிசி பெற்றோல் வாகனங்களுக்கு 25வீத வரி, டீசல் வாகனத்திற்கு 40 வீத வரி.
- ☐ மதுபானத்திற்கு 15 ரூபா அதிகரிப்பு. சிகரட் .50 சதத்தினால் உயர்வு.
- ☐ ஊடகவியலாளர்களின் திறமையைவிருத்தியாக்க விசேட திட்டங்கள். உந்துருளிகள் கொள்வனவுக்கு விசேட சலுகை.
- ☐ யுத்தம், கடல்கோள் காரணமாக பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு மாதம் 1500 ரூபா வங்கியில் வைப்பு
- ☐ ஊனமுற்றோருக்கு என விசேட கவனம்.
- ☐ தொழில் திறன் அபிவிருத்திக்கு பாரிய திட்டங்கள்.
- ☐ ஒரு கிலோ நெல் ரூ.17.50 கொள்வனவு அதிகரிப்பு
- ☐ 50கிலோ உரம் 350 ரூபா
- ☐ அனைத்து அரசாங்க தொழில் நிலையங்களையும் இலாபகரமாக முன்னெடுத்தல்.
- ☐ போக்குவரத்து சீரமைப்புக்கு புதிய பேரூர்திகள் கொள்வனவு.
- ☐ சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு ஊக்கிவிப்புக்கொடுப்பனவு.

என்பன போன்ற பல அம்சங்கள் மகிந்தவின் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## சகோதரிகள்...

பாட்டைக் கட்டுப்படுத்தும்படி மாறி மாறி வந்த ஆட்சியாளர்களிடம் விடுதலைப்புலிகளும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், மனித உரிமை அமைப்புக்களும் மற்றும் சமாதானத்தின்பால் ஆர்வமுள்ள அனைவரும் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காக அந்தக் கோரிக்கைகளும், விண்ணப்பங்களும் சிறிலங்கா அரசால் தாட்சணியமின்றி உதாசீனம் செய்யப்பட்டு வந்ததை அனைவரும் அறிவோம். சிறிலங்கா அரச புலனாய்வினரும் அவர்களின் கூலிப்படையாக இயங்கிவரும் ஒட்டுப்படைகளும் கண்ணியமற்ற முறையில் இங்கே செயற்படுத்தி வரும் அராஜகம் இன்று ஒரு சகிக்க முடியாத விளிம்பிற்கு வந்திருக்கிறது.

அவர்களால் வளர்க்கப்பட்டவர்களே அவர்களின் இனவிரோத மற்றும் தார்மீகமற்ற செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் தங்களின் மேலாளர்களைத் தாக்கியழித்துவிட்டு எம்மிடம் சரணடையும் சம்பவங்கள் கடந்த வருடத்திலிருந்து மிகத் தீவிரமடைந்துவருவது அனைவருக்கும் தெரியும். ஆயுத முனையில் விடுதலை உணர்வை மழுங்கடிப்பதற்காக கொள்கை நெறியற்ற கும்பல்களை அரச பயங்கரவாதம் வளர்த்துவிடும்போது இவ்வகையான பின்விளைவுகள் வருவது இயல்பே. அதுதான் கடந்த ஆறாம் திகதி அம்பாறையில் நடந்தது. தம்மை வளர்த்தவர்களின் தார்மீகமற்ற செயல்களால் அதிருப்தியடைந்த இரு இளைஞர்கள் தமது மேலாளர்களைத் தாக்கியழித்துவிட்டு தார்மீக சக்தியின்பால் சரணடைந்திருந்தார்கள். இச்சம்பவத்தால் தங்கள் உள்முரண்பாடுகள் முற்றி கொள்கையற்ற மற்றும் எதிர்காலமற்ற நிலைப்பாட்டால் எஞ்சியிருக்கும் சிறுதொகையினரும் உணர்ந்து கிளர்ந்து வெளியேறத் தலைப்படுவார்கள் என்றஞ்சிய ஒட்டுப் படைகளும் போரினை வேகமாகத் தூண்டிவிடுவதற்கான காரணங்களைத் தேடிவரும் அரச புலனாய்வுப் பயங்கரவாதிகளும் நேற்றிரவு அவர்களின் அதிருப்தியாளர்களில் ஒருவரான புகழ்வேந்தன் என்பவரின் வீட்டிற்குச் சென்று அங்கே உறங்கிக் கொண்டிருந்த அவரின் சகோதரிகளான யோகராஜா யோகேஸ்வரி (வயது-24), குகன் வதனி(வயது-18) மற்றும் யோகேஸ்வரியின் இரு வயதுக் குழந்தையான யோகராஜா திசா ஆகிய மூவரையும் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள்.

சகோதரிகள் இருவரும் அவ்விடத்திலேயே இறந்துவிட குழந்தை இப்போது பாரதூரமான நிலையில் மருத்துவ சிகிச்சையில் இருக்கிறது. யோகேஸ்வரியின் நான்கே மாதக் குழந்தையொன்றும் வதனியின் ஒருமாதக் குழந்தையொன்றும் இப்போது தாயை இழந்து தவிக்கின்றன.

ஆயுதமேந்தியவர்களை நேரடியாகச் சந்திக்கும் திராணியில்லாத நிலையில் அப்பாவிகளைக் குரூரமாகப் பழிவாங்குவது சிறிலங்கா அரச பயங்கரவாதத்திற்கு ஒன்றும் புதிய வேலையல்ல. இப்போது சமாதானம் என்று சொல்லிக்கொள்ளப்படும் காலத்தில் இத்தகைய கொடூரம் நிகழ்ந்திருப்பது மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை உண்டாக்கியிருக்கிறது.

இதன் பின்விளைவுகள் மக்களின் இயல்புவாழ்க்கையையும் அதனூடாக நலிவடைந்து ஊசலாடும் சமாதானச் செயற்பாடுகளையும் மிகமோசமாகத் தாக்கும் என்பதில் ஐயமில்லை. தவிர, ஆயுதங்களைக் கையிலேந்தாதவர்களின் பாதுகாப்புக்குறித்துக் கரிசனையுள்ள அமைப்புக்கள் உடனடியாகச் செயற்பட்டு இதற்கான பின்னணியை வெளிக்கொணர்வதுடன் இத்தகைய சம்பவங்கள் மேலும் இடம்பெறாதிருப்பதற்கான காத்திரமான முயற்சியில் ஈடுபடவேண்டும். மனித உரிமை ஆர்வலர்களும் ஐ.நா. மனித உரிமை அமைப்புக்களும் இதில் உடனடிக் கவனம் எடுத்து ஒட்டுப்படைகளின் செயற்பாட்டிற்கும் சிறிலங்காப் புலனாய்வுப் பயங்கரவாதத்திற்கும் உடனடி முடிவு கட்டுவதற்கான தீர்க்கமான அழுத்தத்தை சிறிலங்கா அரசிற்குத் கொடுக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

உள்ளூர் மகளிர் அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்தப் பாதகச் செயலுக்கு எதிராகப் போராடவேண்டியது அவசியமாகும். இந்தத் தருணத்தில் தார்மீக சக்திகள் அனைவரும் ஒருங்கிணைந்து தீவிரமாகச் செயற்படாதுவிடின் மனித உரிமைகள் சார்பான இனியெந்த நடவடிக்கைகளும் அர்த்தமற்றுப் போய்விடும் அபாயம் உள்ளதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அநியாயமாகக் கொல்லப்பட்ட அந்த அப்பாவிச் சகோதரிகளின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தொரிவிக்கின்றோம்.

இலங்கைத்தீவில் வாழும் அனைத்து நடுநிலைநாட்டுப் பிரதிநிதிகளும் இந்த அனுதாபத் தெரிவிப்பில் பங்குகொள்வதோடு அரசபயங்கரவாதத்திற்கு எதிரான அழுத்தத்தைத் தரவேண்டும் என்றும் வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவ...

துறை நகர்பகுதியில் இருந்து வடமராட்சி 524 ஆவது படைத்தள அதிகாரியினது கொடும்பாவியை சவப்பெட்டியில் போட்டு: அதனைத் தாங்கிய வண்ணம் யாழ். பருத்தித்துறை வீதியூடாக எடுத்துச் செல்லப்பட்டது.

இராணுவத்தினருக்கெதிரான கோஷங்களை மாணவர்கள் முழங்க, மாணவர்களால் பறை வசித்த வண்ணம் பிரிகேடியரது கொடும்பாவி சவப்பெட்டி ஹாட்லிக்கல்லூரி முன்ன ரங்க நிலைக்கு எடுத்து வரப்பட்டது. அங்கு சவப்பெட்டி வைக்கப்பட்டு பாடசாலை மாணவர்கள் சூழ இருந்து ஒப்பாரி சொல்லி அழ பறை முழங்க கொடும்பாவி தீக்கிரையாக்கப்பட்டது.

கொடும்பாவி தீக்கிரையாக்கப்பட்டதன் பின் அங்கு கூடிநின்ற மாணவர்கள் தமது பாடசாலைச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள காவலரணகளை நோக்கி சரமாரியாக கற்களை வீசி மேலும் தமது எதிர்ப்பினை இராணுவத்தினருக்கு தெரிவித்து 12.00 மணியளவில் தமது போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்திச் சென்றனர். (கா)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.